“மழைநீர் சேமிப்போம்” “பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் “

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 19.07.2021.

## நகர்மன்ற சாதாரணக்கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 பிலவ வருடம், ஆடி மாதம் 08-ம் நாள் 19.07.2021-ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01 :**

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய மெயின் பிளாக் வடக்கு பகுதி உணவகம் முன்பு ஆவின் பாலகம் பின்புறம் இயங்கி வந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக அலுவலகத்திற்கு நிர்வாக காரணங்களால் மாற்று இடம் வழங்க கோரப்பட்டதை தொடர்ந்து, அம்மா குடிநீர் விற்பனை நிலையம் அருகில் மாற்றி அமைத்திட நகர்மன்ற தீர்மானம் எண்: 1847 நாள்: 31-05-2021-ல் அனுமதிக்கபட்டு போக்குவரத்து அலுவலகம் மாற்றும் இடத்தில் செயல்பட்டு வருகிறது.

எனவே தற்போது காலியாக உள்ள மேற்கண்ட கடையினை பொது ஏலம் கோர நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | கடை விபரம் | கடையின் அளவு | ஏல முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய மெயின் பிளாக் வடக்கு பகுதி உணவகம் அருகில் உள்ள கடை எண் 2A | 10 X 20 - 200 ச.அடி. | ரூ:1,40,000/- |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1362 / 2021 / அ3**

**தீர்மான எண் :** 1893
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 02 :**

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தை மூங்கில் கடை எண் : 6 (வரிவிதிப்பு எண் : 125/2005249) திரு.P.முத்தையா என்ற பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.P.முத்தையா த/பெ. பெருமாள் மற்றும் திரு.M.கண்ணன் த/பெ. மாரிச்சாமி இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், திரு.P.முத்தையா என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக கூட்டுத் தொழிலிருந்து விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரி திரு.M.கண்ணன் என்பவரால் உரிய கட்டணம் செலுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்: 92 நாள்: 03-07-2007-ன் படி மேற்கு சந்தை மூங்கில் கடை எண் : 6 (வரிவிதிப்பு எண் : 125/2005249) திரு.P.முத்தையா என்பவர் பெயரிலிருந்து திரு.M.கண்ணன் என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1569/ 2021 / அ3**

**தீர்மான எண் :** 1894
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 03 :**

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தை கழிப்பிடம் அருகில் மேற்கு பார்த்த கடை எண் : 1 (வரிவிதிப்பு எண் : 125/BD01/00209) திரு.N.முருகேசன் என்ற பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.N.முருகேசன் த/பெ. நடராஜன் மற்றும் திரு.K.சிவக்குமார் த/பெ. கிருஷ்ணசாமி இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், திரு.N.முருகேசன் என்பவர் வெளியூர் செல்வலதால் கூட்டுத் தொழிலிருந்து விலகிக்

கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரி திரு.K.சிவக்குமார் என்பவரால் உரிய கட்டணம் செலுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்: 92 நாள்: 03-07-2007-ன் படி மேற்கு சந்தை கழிப்பிடம் அருகில் மேற்கு பார்த்த கடை எண் : 1 (வரிவிதிப்பு எண் : 125/BD01/00209) திரு.N.முருகேசன் என்பவர் பெயரிலிருந்து திரு.K.சிவக்குமார் என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1578 / 2021 / அ3**

**தீர்மான எண் :** 1895
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 04 :

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான வைகை அணையின் புதிய குடிநீர் திட்டத்தில் வைகை ஆற்றில் கட்டப்பட்டுள்ள இயல் நீரேற்று நிலையம் ( Raw Water ) குருவிஅம்மாள்புரம் பகுதியில் கட்டப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ( Water Treatment Plant ) ஆகியவற்றின் மின் இணைப்பு எண். 059094760090 மற்றும் 059094760091 ன் மின்மோட்டார்களின் Capacitor செயல்பாடு குறைபாடு காரணமாக Power Factor 0.85 க்கு குறைவக உள்ளதால், மின்சார வாரியத்தால் மாதாந்திர மின் கட்டணத்துடன் அபாரதத்தொகையுடன் சேர்த்து வசூலிக்கின்றார்கள். எனவே, அபாரதத்தொகை சேர்க்காமல் இருக்கவும், Power Factor 0.85 க்கு மேலே கொண்டு வரவும் பழுதான Capacitor-களை மாற்றி புதிய Capacitor-கள் பொருத்திடவேண்டியுள்ளது.

அதற்கான உத்தேசச்செலவினத் தொகை ரூ. 5.50 இலட்சம் ( ரூபாய் ஐந்து இலட்சத்தி ஐம்பதினாயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு : -</u>** அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1795 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1896
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 05 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் புதிய குடிநீர் திட்டத்தின் கீழ் **SCADA Telemetry system** கீழ் அனைத்து குடிநீர் நீர்த்தேக்க தொட்டியில் ஏற்றப்படும் நீர் மற்றும் விநியோகிக்கப்படும் குடிநீரின் அளவுகள் குறித்து **Online Monitoring** செய்ய ஏதுவாக நகராட்சி அலுவலக வளாகத்தில் புதிதாக கட்டுப்பாட்டு அறை ( **Control Room** ) கட்டப்பட வேண்டியுள்ளது.

எனவே, மேற்கண்ட நகராசி வளாகத்தில் கீழ்பகுதியில் நகராட்சி வளாகத்தில் கீழ் பகுதியில் புதிதாக கட்டுப்பாட்டு அறை ( **Control Room** ) கட்டுவதற்கும், அதற்கான உத்தேசச்செலவினத் தொகை ரூ. 3.20 இலட்சம் ( மூன்று இலட்சத்தி இருபதினாயிரம் மட்டும் ) ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு :-</u>**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1790 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1897
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 06 :</u>**

தேனி – அல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண். 09, டாக்டர் . அம்பேத்கார் நடுத்தெருவில் பொதுமக்கள் தண்ணீர் தேவைக்காக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைகிணறுக்கான தண்ணீர்த்தொட்டி சுமார் 25 ஆண்டுகள் ஆன நிலையில் தற்போது பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட பழுதடைந்த தொட்டியினால் எந்த ஒரு விபத்து ஏற்படாவண்ணம் காக்கும் பொருட்டும், பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ள மேற்கண்ட தண்ணீர் தொட்டியை இடித்து அப்புறப்படுத்தவேண்டியுள்ளது.

அதற்கான உத்தேசச்செலவினத் தொகை ரூ. 0.45 இலட்சம் ( ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு :-</u>** அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1791 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1898
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 07 :</u>**

தேனி – அல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண். 01,03,04, மற்றும் 07 க்குட்பட்ட பகுதிகளுக்கு நகராட்சிக்கு சொந்தமான பாலன்நகர் குடிநீர் தேக்கத்தொட்டியிலிருந்து குடிநீர் சப்ளை செய்யப்பப்பட்டு வருகிறது.மேற்கண்ட வார்டு பகுதிகளில் குடிநீர் பகீர்மானக்குழாய்கள் பதிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிறது. இதனால் அப்பகுதிகளில் உள்ள பகீர்மானக்குழாய்கள் பழுதடைந்து குடிநீர் சரிவர சப்ளை செய்ய இயலவில்லை.இதனால் மேற்கண்ட பகுதிகளில் குடிநீர் சப்ளை பாதிக்கின்றது.

எனவே, மேற்கண்ட வார்டு பகுதிகளில் சீரான குடிநீர் சப்ளை செய்ய ஏதுவாக புதிய பகீர்மானக்குழாய்கள் பதிக்கவேண்டியுள்ளது. அதற்கான உத்தேசச்செலவினத் தொகை ரூ. 7.80 இலட்சம் ( ரூபாய் ஏழு இலட்சத்தி எண்பதினாயிரம் மட்டும் ) ஆகும். மேற்கண்ட பணியினை

மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1792 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1899
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 08 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண். 04,10,11, மற்றும் 13 க்குட்பட்ட பகுதிகளுக்கு நகராட்சிக்கு சொந்தமான பொம்மையகவுண்டன்பட்டி குடிநீர் தேக்கத்தொட்டியிலிருந்து குடிநீர் சப்ளை செய்யப்பப்பட்டு வருகிறது.மேற்கண்ட வார்டு பகுதிகளில் குடிநீர் பகீர்மானக்குழாய்கள் பதிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிறது. இதனால் அப்பகுதிகளில் உள்ள பகீர்மானக்குழாய்கள் பழுதடைந்து குடிநீர் சரிவர சப்ளை செய்ய இயலவில்லை.இதனால் மேற்கண்ட பகுதிகளில் குடிநீர் சப்ளை பாதிக்கின்றது.

எனவே, மேற்கண்ட வார்டு பகுதிகளில் சீரான குடிநீர் சப்ளை செய்ய ஏதுவாக புதிய பகீர்மானக்குழாய்கள் பதிக்கவேண்டியுள்ளது. அதற்கான உத்தேசச்செலவினத் தொகை ரூ. 7.80 இலட்சம் ( ரூபாய் ஏழு இலட்சத்தி எண்பதினாயிரம் மட்டும் ) ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு :-</u>**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1793 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1900
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆஅனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 09 :</u>**

தேனி – அல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண். 01,02,03,04,06,08,09,10,11,12,13,19,20,26, மற்றும் 28க்குட்பட்ட பகுதிகளில் ஏற்கெனவே பதிக்கப்பட்டுள்ள குடிநீர் பகீர்மானக்குழாய்களில் சாலைப்பணிகள் மேற்கொள்ளும் போது மற்றும் பாமரிப்பு பணிகள் மேறகொள்ளும் போது மணல் ,ஜல்லி ஆகியவற்றினால் அடைப்புகள் ஏற்பட்டு மேற்கண்ட பகுதிகளில் குடிநீர் சப்ளை பாதிக்கின்றது.

எனவே, மேற்கண்ட வார்டு பகுதிகளில் சீரான குடிநீர் சப்ளை செய்ய அதில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை நீக்கிடவும் மற்றும் Line Inter Connection பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான உத்தேசச்செலவினத் தொகை ரூ. 6.00 இலட்சம் ( ரூபாய் ஆறு இலட்சம் மட்டும் ) ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1794 / 2021/ இ2**

**தீர்மான எண் :** 1901
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆஅனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 10 :</u>**

இந்நகராட்சியின் அலுவலகப் பயன்பாட்டிற்கு தேவையான கீழ்கண்ட விபரப்படியான கணிணி உபகரணங்கள் வாங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளுவதற்கு கீழ்கண்ட 3 நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **கணிணி பொருட்களின் விபரங்கள்** | **விலைப்புள்ளி கோரிய நிறுவங்கள் கோரிய தொகை GST வரிகள் உட்பட ( 1 எண்ணம் விலை )** | | |
|---|---|---|---|---|
| | | Karunambigai Info System and Services, Sivagangai | Graph Itec Imaging Solutions, Karur | S K Enterprises , Madurai |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Brother TN-B021 | 950 | 1000 | 1000 |
| 2 | Ricoh 2014HS Toner | 3850 | 3900 | 3900 |
| 3 | Dlink 8 Port Switch | 1100 | 1150 | 1150 |
| 4 | Cat6e 3 Mtr Cable | 300 | 350 | 350 |
| 5 | Brother Colour Laser Printer 3270CDW | 26500 | 26900 | 26700 |
| **Total** | | **32700** | **33300** | **33100** |

**அலுவலகக்குறிப்பு** :-

1) மேற்படி பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் **Karunambigai Info System and Services, Sivagangai** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியானது குறைவாக இருப்பதால் அந்நிறுவனத்தின் விலைப்புள்ளி தொகையினை ஏற்று விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்காணும் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1204 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 1902
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 11 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி 07-07-2021 அன்று நடைபெறவிருந்த குத்தகை இனங்களுக்கான பொது ஏல அறிவிப்பு / ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து திரு.R.R.ஜெயராம் சுந்தர் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்: WP (MD) No. 11327/2021 தொடர்ந்துள்ளார்.

மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.K.ஹேம கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகிடவும், மேலும் வழக்கு தொடர்பான செலவினங்களுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1814 / 2021 / அ-3**

**தீர்மான எண் :** 1903
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 12 :

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகத்திற்கு பதிக்கப்பட்டுள்ள பகிர்மானக்குழாய்கள் மற்றும் பம்பிங் மெயின் லைன்களில் ஏற்படுகின்ற கசிவுகள் மற்றும் உடைப்புகளை சரி செய்யும் பணிக்கு **28.05.2021** ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.S. மாணிக்கம் ,<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 871821 | 0.03 % குறைவு |
| 2. | திரு. S. நாராயணசாமி<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 876126 | 0.46 % அதிகம் |

**அலுவலககுறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.03** % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. S. மாணிக்கம் நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குடிநீர் அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி எதிர் நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 857 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1904
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 13 :

**குடிநீர் நிதி –2021–2022 ம்** ஆண்டு நிதியின் கீழ் தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். **01** முதல் **16** வரை பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மினிபவர் பம்புகளில் ஏற்படுகின்ற பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு **28.05.2021** ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | திருமதி.டி. தவமணி நகராட்சி ஒப்பந்ததாரர் | 864652.00 | **0**.03 % குறைவு |
| 2. | திரு. எஸ். நாராயணசாமி நகராட்சி ஒப்பந்ததாரர் | 862263.00 | 0.30 % அதிகம் |

<u>அலுவலககுறிப்பு:</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.03** % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி .டி. தவமணி நகராட்சி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குடிநீர் அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி எதிர் நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 855 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1905
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 14 :</u>

**குடிநீர் நிதி 2021–2022 ம்** ஆண்டு நிதியின் கீழ் தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். **17** முதல் **33** வரை பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மினிபவர் பம்புகளில் ஏற்படுகின்ற பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு **28.05.2021** ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | திரு.எஸ்.மாணிக்கம் நகராட்சி ஒப்பந்ததாரர் | 864652.00 | 0.03 % குறைவு |
| 2. | திரு. எஸ். நாராயணசாமி நகராட்சி ஒப்பந்ததாரர் | 869650.00 | 0.55 % அதிகம் |

<u>அலுவலககுறிப்பு :-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. எஸ். மாணிக்கம் நகராட்சி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குடிநீர் அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி எதிர் நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 856 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1906

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 15 :</u>

**குடிநீர் நிதி 2021 - 2022 ம்** ஆண்டு நிதியின் கீழ் தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பழனிசெட்டிபட்டி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் வீரப்ப அய்யனார் கோயில் குடிநீர் திட்டம் ஆகியவற்றில் உள்ள மோட்டார் பம்ப், மின் இணைப்பு மற்றும் Intake - well ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் மற்றும் பராமரித்தல் பணிக்கு 28.05.2021 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருமதி. டி. தவமணி<br>நகராட்சி ஒப்பந்தததாரர் | 862330.00 | 0.01 % குறைவு |
| 2. | திரு. எஸ். நாராயணசாமி<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 862565.00 | 0.02 % அதிகம் |

<u>அலுவலககுறிப்பு :-</u> அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. டி. தவமணி நகராட்சி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குடிநீர் அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி எதிர் நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 854 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1907

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 16 :

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான வைகை அணையின் புதிய குடிநீர் திட்ட நீரேற்று நிலையத்திற்கு தேவையான ஆலம் சப்ளை செய்யும் பணிக்கு 28.05.2021 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ** | **கூடுதல் / குறைவு** |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | Sri Sathya dyes and Chemicals, Andipatti | 812000.00 | 0.43 % குறைவு |
| 2. | People Chemical Industries, Andipatti | 840000.00 | 3.00 % அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு:</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.43 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள Sri Sathya dyes and Chemicals, Andipatti அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குடிநீர் அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி எதிர் நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 552 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1908

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 17 :

தேனி–அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான வைகை அணையின் புதிய குடிநீர் திட்ட நீரேற்று நிலையத்திற்கு தேவையான குளோரினேசன் சப்ளை செய்யும் பணிக்கு **28.05.2021** ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுல் / குறைவு |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | Sri Sathya dyes and Chemicals, Andipatti | 810810.00 | 0.43 % குறைவு |
| 2. | Peaple Chemical Industries, Andipatti | 842400,00 | 3.44 % அதிகம் |

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.43 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள Sri Sathya dyes and Chemicals, Andipatti அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குடிநீர் அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி எதிர் நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1428 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1909
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 18 :

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்குச் சொந்தமான ஆணையாளர் குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 50 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், தற்போது கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருப்பதால், அக்குடியிருப்பினை முற்றிலுமாக இடித்து விட்டு, தற்போது புதியதாக குடியிருப்பு கட்டப்பட உள்ளது. மேற்படி குடியிருப்பில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள மரக்கதவுகள், ஜன்னல்கள் மற்றும் கிரில் அமைப்புகளை ஏலம் முறையில் அப்புறப்படுத்தவதற்கும், அதற்கான உத்தேச மதிப்பு ரூ.14000/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 1210 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1910
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ, மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 19 :

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், தெருவிளக்கு EB மீட்டர் பெட்டிகள் ( EB Meter Box ) 50 Nos சப்ளை செய்து பொருத்துதல் பணி தெருவிளக்குகளை சுவிட்ச்களுக்கான மின் இணைப்பு வயர்கள் மற்றும் சுவிட்சுகள் Fies Carrier பழுதடைந்த சுமார் 50 இணைப்புகளில் உள்ளது. பொது மக்கள் நலன் கருதியும், மேலும் விபத்துகள் ஏற்படா வண்ணம் முன்னெச்சரிக்கையாக தெருவிளக்குகளுக்குரிய EB மீட்டர் பெட்டிகள் ( EB Meter Box ) 50 Nos சப்ளை செய்து பொருத்த வேண்டியுள்ளது. எனவே, மேற்படி பொருட்கள் மற்றும் அதற்கான பாதுகாப்பு பெட்டிகளை புதிதாக மாற்றி அமைக்க அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.7,00,000/- ( ரூபாய். ஏழு இலட்சம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

,இ) பொது மக்கள் அத்தியாவசியம் கருதி மன்ற முன் அனுமதி எதிர் நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1867 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1911
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 20 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | KAL Publications | எண்: 3300283293 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு | ரூ: 15,876/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | (P) Ltd.<br>(தினகரன்) | நாள்:<br>22-06-2021 | ஆணை எண்: 92 / ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2021 நாள்: 21-06-2021. | |

மேற்ககண்ட தொகை ரூ:15,876/- (ரூபாய்: பதினைந்து ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து ஆறு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1362 / 2021 / அ3**

**தீர்மான எண் :** 1912
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ, மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 21 :

தேனி - அல்லிநகரம் நகராட்சியில், பாதாள சாக்கடை திட்டத்தில், கருவேல்நாயக்கன்பட்டி பகுதியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை கடந்த 19.02.2021ம் தேதி முதல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த சுத்திகரிப்பு நிலையத்தில், கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்ட தண்ணீரில் கலக்குவதற்கு தேவையான குளோரின் குறைந்தளவே இருப்பில் உள்ளதால், இனிவரும் 1வருட காலத்திற்கு தேவையான குளோரின் விநியோகம் செய்ய தொகை ரூ 4.00 இலட்சமாகும். மேற்படி பணிக்கான செலவினவினத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1829 / 2021 / இ3**

**தீர்மான எண் :** 1913
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 22 :</u>**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கர்ணல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலைத்திற்கு மேற்கே செல்லும் பெரியகுளம் - தேனி புறவழிச்சாலயில் 60w LED தெரு மின் விளக்குகள் 2013 ம் வருடம் டிசம்பர் மாதத்தில் அமைக்கப்பட்டது. தற்பேது 7 வருடங்களுக்கு மேலாகிவிட்டதால், மேற்கண்ட மின்கம்பங்களுக்கிடையே மின் இணைப்பு அலுமினிய கேபிள் வயர்கள் பழுது ஏற்பட்டு அடிக்கடி தெருமின் விளக்குகள் பழுதடைந்து விடுகிறது. பழுதான மின் இணைப்பு வயர்கள் வெளிப்படையாக உள்ளதால், பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலையில் உள்ளது. எனவே, பெரிகுளம் புறவழிச்சாயைில் உள்ள 48 எண்ணம் 60w LED தெரு மின் விளக்குகளுக்கும், ரேந்து நிலையத்திலிருந்து சிவாஜி நகர் செல்லும் பாதையில் உள்ள 5 எண்ண 60w LED தெருமின் விளக்குகளுக்கும் மின் கம்பங்களுக்கும் இடையே பழுதான மின் இணைப்பு வயர்கள் நீக்கிவிட்டு ( அப்புறப்படுத்தி விட்டு ), புதிய மின் இணைப்பு வயர்கள் பொருத்தும் பணிக்கும், மின் இணைப்பு வயர்களுக்கு மின் கம்பத்தில் சந்திப்பு ( Junction ) பாக்ஸ் பொருத்த வேண்டியுள்ளது. அதற்கான உத்தேசச்செலவினத் தொகை ரூ.7.70 இலட்சம் ( ரூபாய் ஏழு இலட்சத்தி எழுபதினாயிரம் மட்டும் ) ஆகும்.

எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு :-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1846 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1914
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 23 :</u>**

தேனி–அல்லிநகரம் நகராட்சி அல்லிநகரம் கிராமம், அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித்திட்டம் எண்–3ல் 659 பகுதி மற்றும் 660 பகுதி நகரளவை வார்டு –C, பிளாக்–46, T.S.NO 10/8,10/9 இல் உள்ள 0.58 ஏக்கர் இடத்தினை 12 எண்ணம் மனைகளாகப் பிரித்து உதவி இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்களின் ந.க.எண்.952/2020/தே.மா.2 நாள்.05.05.2021 தேதியிட்டு மனை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளபடி 44.80 மீ நீளத்திலும், 9.0 மீட்டர் அகலத்திலும் மற்றும் 36.95மீட்டர் நீளம் x 9.0 மீட்டர் அகலம் என ஒதுக்கீடு செய்யப்பட்ட இரண்டு சாலைகளை நகராட்சிக்கு ஆவண எண்.1054/2021 ல் தான பத்திரம் பதிவு செய்து அசல் ஆவணம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். மேற்படி 2 சாலைகளையும் நகராட்சி பராமரிப்பில் எடுத்துக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1689 / 2020 / எப்–1**

**தீர்மான எண் :** 1915
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 24 :</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சி **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய மெயின் பிளாக் வடக்கு பகுதி உணவகம் அருகில் உள்ள கடை எண் 2 A** குத்தகை விடுவதற்கு 19-07-2021 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு. V.ராம்குமார், ஆண்டிபட்டி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:2,700/-** |
| 2 | திரு. M.சக்தி, தேனி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:4,100/-** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட இனத்திற்கு வரிசை எண்:2-ல் கண்ட **திரு.M.சக்தி** என்பவர் மாத வாடகையாக **ரூ:4,100/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். ஏற்கனவே மேற்கண்ட கடைக்கு அருகில் இதே அளவில் உள்ள கடைகள் மாத வாடகை ரூ:4,000/- என இருப்பதால் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1362 / 2021 / அ-3**

**தீர்மான எண் :** 1916
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 25 :</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தினச்சூரியன் , மதுரை. | எண்: 728 நாள்: 04-07-2021 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 72 / ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2021 நாள்: 04-07-2021. | ரூ: 30,240/- |

மேற்ககண்ட தொகை ரூ:30,240/- (ரூபாய்: முப்பது ஆயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1362 / 2021 / அ3**

**தீர்மான எண் :** 1917
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 25 :**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான, நகராட்சி அலுவலகம், உப்பார்பட்டி உரக்கிடங்கு, எரிவாயு தகனமேடை மயானக் கூடம் ஆகிய இடங்களில் CCTV கேமராக்கள் பொருத்துவதற்கும், மற்றும் நகராட்சி அலுவலகத்தில் Mini Meeting Hall - ல் Video Conference - க்கான அமைப்புகள் அமைக்கப்பட வேண்டியிருப்பதால், அதற்கான உத்தேசத்தொகை ரூ 4,00,000/-ம் ஆகும். மேற்படி செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1292 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 1918
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் ( மற்றும் )
ஆணையாளர்,
தேனி - அல்லிநகரம் நகராட்சி.